மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைகள் 41. அரசு ஏற்றுக் கொண்ட மொத்தம் 116 பரிந்துரைகளில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது போக மீதம் இப்பொழுது செயல் படுத்தப்பட்டு வருகிற பரிந்துரைகள் 38. இந்தப் பரிந்துரைகள் முழுமை யாகச் செயல்படுவதற்கு ஆறு கோடி ரூபாய் செலவாகும்.

காவலர் படையை மாற்றியமைத்தல்

* 182 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75-ம் ஆண்டில் காவலர் படையை காலத்திற்கேற்ப மாற்றி யமைக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைமுன் விவர அறிக்கை யொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பல உட்கோட்டங்கள் தொடங்கப்பட்ட விவரங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அவை சிறிய முறையில், பலனுள்ள வகையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களாக இருப்ப வர்கள்—லா அண்டு ஆர்டர்—தொடர்பாக பல கிராமங்களுக்குப் போக வேண்டிய சூழ்நிலை சில நேரங்களில் ஏற்படுகிறது. அவர்களுக்குக் குறைந்த பட்சம் மோட்டார் சைக்கிள்கூட இல்லாத நிலையில் மிகவும் சிரமமாக இருக் கிறது. அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் அல்லது ஜீப்—உடனடியாக இல்லாவிட்டாலும், படிப்படியாக வரும் காலத்திலாவது வழங்க உரிய நடவ டிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படிப்படியாக அவர்களுக்கெல்லாம் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டு வருகின்றது. விரைவில் அவை முழுமை யாக நிறைவேற்றப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the increase in the number of crimes in the City of Madras, is there any proposal to increase the strength of the Crime Branch and particularly to modernise the Police Force.

@ 698–708 -ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஏதாவது தேவைப்படுமானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட விவர அறிக்கையில் 1974-75 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உட்கோட்டங்கள் வட்டங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றுகூட இடம் பெறவில்லை. அதற்கு ஏதாவது சிறப்பான காரணங்கள் இருக்கின்றனவா? இல்லையென்றால், வடார்க்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டிலாவது இப்படிப்பட்ட வட்டங்களை உருவாக்குவதற்கு முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒருவேளை வடார்க்காடு மாவட்டத்தில் குற்றவாளிகள் குறைவாக இருக்கலாம் (சிரிப்பு).

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, காவல் நிலையங்களின் எல்லை வரம்பு பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. இதை மாற்றியமைத்தால் காவலர்களுக்கு எளிதாகவும், குற்றவாளிகளை விரைவில் கண்டு பிடிப்பதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, இதை மாற்றியமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியை நான் புரிந்துகொண்ட வரையில், ஒரு காவல் நிலையத்திற்கும் இன்னொரு காவல் நிலையத்திற்கும் உள்ள தொலைவைக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். தொலைவு அடிப்படையில் மட்டுமல்லாமல், அங்கிருக்கும் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலும், குற்றங்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தின் அடிப்படையிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, அந்த வகையில் இப்பொழுது எந்த எந்தப் பகுதிகளில் இந்த நிலையங்கள் தேவைப்படுகின்றன என்பதை ஆராய்ந்து செயற்குறிப்பு அனுப்பப் படும்போதெல்லாம், அரசு அவைகளைப் பரிசீலித்து கூடுமானவரையில் புதிய காவல் நிலையங்களை அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, காலத்திற்கேற்ப என்ற அடிப்படையில், கோடைக் காலத்தையும் குளிர் காலத்தையும் மனதிலே வைத்து, அவர்களுக்கு உடை விஷயத்திலே கவனம் செலுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட உடை மாற்றங்கள் நீலகிரி போன்ற குளிர்ந்த பகுதிகளைத் தவிர வேறு இடங்களில் தேவைப்படவில்லை.